## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.277/2020

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | கோபாலகிருஷ்ணன் |
| தகப்பனார் / கணவர் | .. | வெங்கடேஷ் |
| வயது | .. | 47 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான்.

**2 முதல் 5 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5ம் வாதி பெருமாள் என்பவருக்கு நான் சொந்த அத்தை மகன் என்றால் சரிதான். சர்வே எண்.76 ல் 40 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமாக இருந்து என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது ஆனால் சொன்னார்கள். அந்த சொத்து தற்போது வரை

பயன்படுத்தப்படாமல் முன் செடியாக தான் உள்ளது என்றால் சரிதான். படியப்ப முதலியார் சொந்தமானது என சொல்லியுள்ள நிலையில் அதற்கு பட்டா உள்ளதா என்றால் சொன்னார்கள். ஆனால் பட்டாவை பார்க்கவில்லை. நான் 1974 ல் பிறந்தேன். 1981 முதல் 1985 வரை UDR பட்டா கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் கேள்விபட்டேன். UDR முன்பு இந்த வழக்கு சொத்து யாருக்கு சொந்தமாக இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. UDR ன் போது இந்த வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத 1ம் பிரதிவாதி தவறுதலாக பட்டா கொடுக்க விவரம் தெரியுமா என்றால் தெரியும். பக்கத்து நிலத்துக்காரரான 1ம் பிரதிவாதி பெயரில் 40 செண்ட் பட்டா இருந்தது என்றால் சரிதான். இந்த விவரம் தெரிந்த பிறகு சுரேஷ் என்பவர் 20 செண்ட்ற்கு பட்டா மாற்றம் தொடர்பான மனு அளித்தார் என்றால் சரிதான். இது சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலர் வாக்குமூலம் வாங்கினார் என்றால் சரிதான். கன்னியம்மாளும், வாரிசுகள் இருவரும் சுரேஷ் குடும்பத்திற்கு பட்டா மாற்றம் செய்ய எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என எழுதிக்கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது. படியப்ப முதலியாருக்கு உடன்பிறந்தவர்கள் இருக்கிறார்களா என்றால் தெரியாது. படியப்ப முதலியாருக்கு உடன்பிறந்தவர்கள் சடகோபன் மற்றும் முனியன் என்கிற முனியப்பன் குறித்து நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் படியப்ப முதலியாருக்கு இருக்கும் இரண்டு சகோதரர்களை மறைத்து வாதிகள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. படியப்ப

முதலியாருக்கு சகோதரர்கள் இல்லை. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்ட என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மொத்த தாவா சொத்தான் 40 செண்டில் படியப்ப முதலியாருக்கு 20 செண்ட், சடகோபன் மற்றும் முனியனுக்கு தலா 10 செண்ட்மும் பாகப்பிரிவினை ஒதுக்கப்பட்டது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. படியப்ப முதலியாருக்கு பாகபிரிவினையில் கிடைத்த 20 செண்ட் அவரது மகன்களான ஆறுமுகம், கோவிந்தசாமி பாகப்பிரிவினை செய்த போது அது ஆறுமுகத்தின் பாகத்திற்கு சென்றது என்றால் அதுபற்றி தெரியாது. சடோகப்பனுக்கு பாத்தியப்பட்ட 10 செண்டை அவரது இரண்டு மகன்களான கந்தசாமி மற்றும் சுப்பிரமணியும் தலா 5 செண்ட் வீதம் பிரித்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. முனியப்ப உடையாரக்கு பாத்தியப்பட்ட 10 செண்டை அவரது இரண்டு மகன்களான துரைசாமி மற்றும் குப்புசாமியும் தலா 5 செண்ட் வீதம் பிரித்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. துரைசாமியின் 5 செண்டை 1927ல் குப்புசாமியின் மனைவிக்கு கிரைய கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1933ஆம் ஆண்டு சடகோபனுக்கும் மற்றும் முனியனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஒரு சோனாசல முதலியாருக்கு அடமானம் போட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சடகோபன் மற்றும் முனியன் வாரிசுகள் இடமிருந்து 4ம் பிரதிவாதியின் முன்னோர்கள் 20 செண்டை கிரையம் வாங்கி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 4ம் பிரதிவாதி தகப்பனார் பெயர் தண்டபானி. 4ம் பிரதிவாதியின் பாட்டி

பெயர் உமயவள்ளி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 4ம் பிரதிவாதியின் முன்னோர்கள் 20 செண்டை கிரையம் பெற்றிருப்பினும் பட்டா தவறுதலாக 1ம் பிரதிவாதி கன்னியம்மாள் பெயரில் மாறிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் நிலம் 1ம் பிரதிவாதியின் பேரில் பட்டா மாறி விவரம் வாதிகளுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சாதாரணமாக ஒரு கூட்டுக்குடும்பத்தில் தகப்பனார் இறந்துவிட்டால் குடும்பத்தில் பெரிய மகன் பெயரில் பட்டா வழங்கும் வழக்கம் உள்ளது என்றால் சரிதான். அதுபோல தான் படியப்ப முதலியார் பெயரில் 40 செண்ட் இருந்தது என்றால் தெரியாது. அதன்பிறகு 4ம் பிரதிவாதி பட்டாவை தங்கள் பெயரில் மாற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மீண்டும் வாதிகள் செல்வாக்கை மீண்டும் அந்த பட்டாவை 1ம் பிரதிவாதி பெயரில் மாற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1927ல் இருந்து தாவா சொத்திற்கான ஆவணங்கள் தொடர்ச்சியாக பிரதிவாதிகளுக்கு உள்ளது என்று சொன்னால் இருக்கிறது என்று சொன்னார்கள். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் வடபுறம் 20 செண்ட் சொந்தமாக உள்ளது என்றும் வாதிகளுக்கு அதில் முழு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் 40 செண்ட்க்கு தாவா சொத்திற்கு ஆவணங்கள் வைத்துள்ளார்களா என்றால் வைத்துள்ளார்கள். 100 ஆண்டுகளுக்கு மேலாக வாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக பிரமாணபத்திரத்தில் கூறியுள்ளது என்றால் தவறு தான். நான் பிறந்ததிலிருந்த அனுபவித்த வருகிறார்கள். 4ம் பிரதிவாதியின்

குடும்பத்திற்கு சொந்தமானது என்றும் மேலும் 20 செண்டை அவர்கள் தான் இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. வாதிகள் நெருங்கிய உறவினர்கள் அவர்களுக்கு பணிந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.